# amfori BSCI சொற்களஞ்சியம்[1]

இந்த சொற்களஞ்சியம் amfori BSCI -இன் சூழலில் புரிந்து கொள்ளப்பட வேண்டும், இது amfori BSCI பங்கேற்பாளர்கள் மற்றும் அவர்களது தொழில் பங்குதாரர்களுக்குக், குறிப்பாக, உற்பத்தியாளர்களுக்குப் பொருந்தும். amfori BSCI சொற்களஞ்சியத்தின் அனைத்து முந்தைய பதிப்புகளையும் இது மீறுகிறது.

| உருப்படி | வரையறை |
|---|---|
| **முகவர்** | வழங்கல் சங்கிலியில், பொருட்களை வாங்கும் வணிக நிறுவனத்தையும் விற்கும் வணிக நிறுவனத்தையும் இணைக்கும் ஒரு நபர். முகவர் பொருட்களை உற்பத்தி செய்யவோ அல்லது சொந்தமாக வைத்திருக்கவோ மாட்டார். amfori BSCI நோக்கங்களுக்காக, முகவர் என்பவர் ஒரு தொழில் பங்குதாரர் ஆவார். |
| **தொழிற்பயிற்சி பெறுபவர்** | கைவினைத் தொழில் ஒன்றை முறையாகக் கற்றுக்கொள்பவர் அல்லது ஒரு வணிக நிறுவனத்தில் தன் படிப்பிற்கேற்ற துறையில் குறிப்பிட்ட நிபுணத்துவம் பெறுவதற்காக பயிற்சி எடுப்பவர். |
| **தொழிற்பயிற்சி** | ஒரு பள்ளிக்கூடம், அல்லது பயிற்சி மையம், அல்லது பணியிடத்தில் மாறுபட்டக் காலங்களில், முறையான, நீண்ட காலப் பயிற்சி; தொழிற் பயிற்சி பெறுபவர் முதலாளியுடன் ஒப்பந்த அடிப்படையில் இணைக்கப்பட்டு ஊதியம் (ஊதியம் அல்லது படிகள்) பெறுகிறார். தொழிற்பயிற்சி விதிமுறைகள் வழக்கமாக சட்டம் மற்றும் தொழிலாளர் ஒப்பந்தங்களால் ஒழுங்குபடுத்தப்படுகின்றன. இந்த விதிமுறைகளின் மூலம், தொழிற்பயிற்சி பெறுபவருக்கு ஒரு குறிப்பிட்ட வேலைவாய்ப்புக்கு வழிவகுக்கும் பயிற்சியை வழங்குவதற்கானப் பொறுப்பை அந்த முதலாளி எடுத்துக்கொள்கிறார். |
| **விரும்பக்கூடிய இலக்குகள்** | வணிக நிறுவனங்கள் தங்களது இலக்கில் ஒரு பெரிய உயரத்தை அடைய உதவுபவை நோக்கங்கள். அந்த வணிக நிறுவனம் நிர்ணயிக்கப்பட்ட உயரத்தைத் தொட உதவும் வகையில் வழக்கமாக ஒரு வரிசையான நெடுங்கால மற்றும் குறுகிய கால நோக்கங்கள் வடிவமைக்கப்படுகின்றன. |
| **தணிக்கை** | திருப்தியான ஆதாரங்களை நோக்கி ஒரு முறையான ஆய்வு, அல்லது ஒரு நிலையை அல்லது சூழ்நிலையை மீளாய்வு செய்தல். தணிக்கைகள் **குறிக்கோளுடனும், பாரபட்சமின்றியும், சுயாதீனமாகவும் செய்யப்பட வேண்டும்.** தணிக்கைச் செயல்முறை முறையானதாகவும் ஆவணப்படுத்தப்படவும் வேண்டும். amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, amfori BSCI நடத்தை விதி மற்றும் அதன் அமல்படுத்துதல் விதிமுறைகளிலிருந்து வரும் தரநிலைகளுக்கு ஏற்ப amfori BSCI பங்கேற்பாளர்களின் வழங்கல் சங்கிலியில் சமூகச் செயல்திறனைத் தணிக்கைகள் சரிபார்க்கும். அதற்கென சரியான முறைகளையும், தணிக்கை சாதனங்களையும் அவர்கள் பயன்படுத்தலாம். தணிக்கை எனும் சொல், பயன்படுத்தப்பட்ட முறைகளைப் பொருட்படுத்தாமல் மற்றும்/அல்லது அனைத்து வகை நோக்கங்களையும் உள்ளடக்கியது. |

[1] பதிப்புரிமை 2017 மூலம் amfori

| | |
|---|---|
| **தணிக்கை ஒருங்கிணைப்புத் திட்டம்** | amfori BSCI தணிக்கைகளை நடத்தும் போது amfori BSCI மதிப்புகள் மற்றும் கொள்கைகள் தொடர்ச்சியாக மதிக்கப்படுகின்றன என்கிற உத்திரவாதத்தைத் தரும் வகையில் வடிவமைக்கப்பட்ட ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட நடைமுறைகளின் தொகுப்பு ஆகும். இதில் உள்ளடங்குபவை, ஆனால் இவை மட்டுமே அல்ல: a) கண்காணிப்பு செயல்முறை மற்றும் அதனுடன் தொடர்புடைய நடவடிக்கைகளின் மாறாத்தன்மையையும் நம்பகத்தன்மையும் உறுதி செய்தல்; b) தணிக்கை நிறுவன செயல்திறனின் மாறாத்தன்மையையும் நம்பகத்தன்மையையும் உறுதி செய்தல். |
| **தணிக்கை செய்யப்படுவர்** | தணிக்கை செய்யப்படும் ஒரு நிறுவனம் (அல்லது நிறுவனத்தின் ஒரு பகுதி). நிறுவனங்கள் ஒன்று அல்லது பல சட்டப்படியான நிறுவனங்களை உள்ளடக்க முடியும். amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, amfori BSCI -பங்கேற்பாளரால் அடையாளம் காட்டப்பட்ட **உற்பத்தியாளர்கள்**, கவனமாகச் செயல்படுவதன் விளைவாக, ஒரேயொரு முறை மட்டும் தணிக்கை செய்யப்படுவார்கள். ஆகவே, ஒரு **உற்பத்தி வேலை சூழல்** இல்லாத amfori BSCI பங்கேற்பாளர்கள் மற்றும் தொழில் பங்குதாரர்களுக்கு, கண்காணிப்பு செயல்முறையில் சேர்க்கப்படும் தகுதி இல்லை. |
| **தணிக்கையாளர்** | தணிக்கைச் செய்யப்படுவரின் சமூகச் செயல்திறன் மீது தகுதி பெற்றத் தணிக்கைத் தீர்ப்பை அளிப்பதற்காக நியமனம் செய்யப்படும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு நபர். ஆவணங்கள் பரிசோதனை, நேர்காணல்கள் மற்றும் தல ஆய்வுகள் மூலம் தணிக்கையாளர் ஆதாரங்களைச் சேகரிப்பார்.<br><br>amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, தணிக்கையாளர்கள் SAAS (கீழே உள்ள வரையறையைப் பார்க்கவும்) அங்கீகாரம் பெற்ற தணிக்கை நிறுவனங்களின் வல்லுநர்களாக இருக்க வேண்டும். அவர்கள் உயர்தர அளவுகளைப் பூர்த்தி செய்வதோடு SAAS மற்றும் amfori BSCI -இன் தகுதித் தேவைகளையும் பூர்த்தி செய்தாக வேண்டும். |
| **அடிப்படை தேவைகள் ஊதியம்** | பணியாளர்கள் தங்களது அடிப்படைத் தேவைகளை (வீட்டுவசதி, ஆற்றல், ஊட்டச்சத்து, உடை, சுகாதாரம் பேணுதல், கல்வி, குடிநீர், குழந்தைப் பராமரிப்பு, போக்குவரத்து மற்றும் சேமிப்பு) நிறைவேற்றிக் கொள்ளும் வகையில் ஒரு ஊதியம், இது கூடுதல் சுய வருமானம் மற்றும் சார்ந்திருப்போரையும் கருத்தில் எடுத்துக்கொள்வதை உள்ளடக்குகிறது. **வாழ்க்கை ஊதியம்** என்றும் குறிப்பிடப்படுகின்றது. amfori BSCI அமைப்புக்குள், தணிக்கையாளர்கள், சமூகப் பொறுப்புணர்வு சர்வதேச (SAI) அமைப்பு உருவாக்கிய முறையைப் பயன்படுத்தித் தணிக்கைச் செய்யப்படுவர் மட்டத்தில் அடிப்படைத் தேவைகளைக் கணக்கிட வேண்டும். தணிக்கை அறிக்கையின் முதன்மைத் தரவின்கீழ் அந்தக் கணக்கீட்டை அறிவிக்க வேண்டும். |
| **amfori BSCI அர்ப்பணிப்பு** | amfori BSCI பங்கேற்பாளர்கள் தங்கள் சமூக பொறுப்புணர்வுகளை உள்வாங்கிக்கொள்ளும், பொது அறிக்கையை இது குறிக்கிறது. amfori BSCI பங்கேற்பாளர்கள், சமூக இணக்கத்தை நோக்கிய தொடர்ச்சியான முன்னேற்ற செயல்பாட்டில் தங்கள் தொழில் பங்குதாரர்களையும் சேர்ப்பதற்கானத் திட்டமிடுதலுக்கு ஆதரவாக ஒரு **அர்ப்பணிப்புச் சூத்திரத்தை** amfori BSCI வழங்குகிறது. |
| **amfori BSCI தகவல் கருத்தரங்கு** | amfori BSCI -யை வெற்றிகரமாக அமல்படுத்தத் தேவையான தகவல்களைப் பங்கேற்பு நிறுவனங்களுக்கு வழங்குவதற்காக amfori BSCI -ஆல் ஏற்பாடு செய்யப்படும் ஒரு முறையான விளக்கப்படக் காட்சி. amfori BSCI -யை ஏற்றுக்கொள்ளும் amfori BSCI உறுப்பினர்கள் amfori -யில் இணைந்த பிறகு, 6 மாதங்களுக்குள் ஒரு amfori BSCI தகவல் கருத்தரங்கில் கலந்து கொள்ள வேண்டும். |
| **amfori BSCI பங்கேற்பாளர்** | amfori BSCI -யை ஏற்றுக்கொள்ளும், வெளிநாட்டு வர்த்தக சங்கத்தின் சாதாரண உறுப்பினர் (amfori). |
| **amfori BSCI மேடை** | amfori BSCI பங்கேற்பாளர்கள் தங்களுடைய வழங்கல் சங்கிலியில் amfori BSCI -ஐ அமல்படுத்துவதற்கானத் தகவல்களைப் பரிமாறிக் கொள்ள அனுமதிக்கின்ற amfori BSCI -ஆல் அமைக்கப்பட்ட தகவல் தொழில்நுட்ப அம்சங்கள் மற்றும் தொழில்நுட்பங்களின் தொகுப்பு ஆகும். amfori BSCI நிறுவனத் தணிக்கைகள் மற்றும் தணிக்கை அறிக்கைகள் இதில் அடங்கும், ஆனால் இவை மட்டுமல்ல. |

| | |
|---|---|
| **amfori BSCI பங்குதாரர் மன்றம்** | amfori -இன் ஒரு ஆளுகைக் குழு. இதில் பங்குதாரர்களின் குழுமங்களில் இருந்து அதிகபட்சம் 20 பிரதிநிதிகள் இருக்கலாம். amfori BSCI வழிகாட்டும் குழுவில் ஆலோசகராகப் பங்கேற்பதற்காக ஒரு பிரதிநிதியை இது நியமிக்கிறது. |
| **amfori BSCI வழிநடத்தும் குழு** | amfori BSCI நடவடிக்கைகளைத் தீர்மானிக்கும் amfori குழு. amfori BSCI தொடர்பான சேவைகளைப் பயன்படுத்தும் ஒன்பது சாதாரண உறுப்பினர்களைக் கொண்டது இது. amfori BSCI வழிகாட்டும் குழுவின் உறுப்பினர்கள், சாதாரண உறுப்பினர்கள் வெளிப்படுத்திய விற்பனை வருவாயின் அளவைப்பற்றி அவர்களின் பன்முகத்தன்மையைப் பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். பங்குதாரர் குழுவின் ஆலோசனை உரிமையுள்ள ஒரு பிரதிநிதியையும் இது உள்ளடக்குகிறது. |
| **amfori BSCI வேலை குழுக்கள்** | வழிகாட்டும் குழுவால் நிறுவப்பட்ட amfori குழுக்கள். இவை, amfori BSCI பங்கேற்பாளர்களிடமிருந்து வந்த பிரதிநிதிகளால் ஆனவை. இக்குழு உறுப்பினர்கள் amfori BSCI வழிகாட்டும் குழுவிற்கு ஆதரவான, அவர்களது ஆணை மற்றும் குறிப்பிட்ட பணிகளை வரையறுக்கும், வேலையைச் செய்யும் பங்காற்றுகின்றனர். |
| **வணிக நிறுவனம்** | நுகர்வோர்கள் அல்லது வாடிக்கையாளர்கள் ஆகிய இருவருக்கும், அவர்களின் உரிமை வடிவத்தைப் பொருட்படுத்தாது அல்லது அவர்கள் ஒழுங்கமைக்கப்படும் வழியைப் (கடன் வரம்பு, வரி ஆதாயம் அல்லது இணக்க அளவுகோல்...) பொருட்படுத்தாது, சரக்கு வணிகம், சேவைகளில், ஈடுபடும் ஒரு நிறுவனம். amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, amfori BSCI பங்கேற்பாளர்களும் அவர்களுடைய தொழில் பங்குதாரர்களும், குறிப்பாக, ஆனால் அது மட்டும் இல்லாது, சமூக செயல்திறன் கண்காணிக்கப்படும் உற்பத்தியாளர்களும் வணிக நிறுவனங்கள் ஆகும். |
| **தொழில் பங்குதாரர்கள்** | தயாரிப்புகள் அல்லது சேவைகள் பெறப்பட்ட அல்லது அத்தகைய தயாரிப்புகள் மற்றும் சேவைகளின் வழங்கலுக்கான ஒப்பந்தம் முடிக்கப்பட்ட எந்தவொரு வெளிப்புறத் தரப்பு. இந்த உறவுமுறை ஒப்பந்தம் சார்ந்ததாக இருக்கலாம், மற்றும் பிரத்யேக உறவுமுறை எதுவும் தேவைப்படலாம் அல்லது தேவைப்படாமல் இருக்கலாம். தொழில் பங்குதாரருக்கான உதாரணங்கள் பின்வருமாறு:<br><br>ஒரு உற்பத்தியாளர்<br><br>ஒரு வழங்குநர்<br><br>ஒரு வாடிக்கையாளர்<br><br>ஒரு சேனல் இடைத்தரகர் (முகவர் அல்லது மறுவிற்பனையாளர் போன்றவர்கள்),<br><br>தொடர்புடைய பொருட்களை விற்கும் ஒரு விற்பனையாளர் (உதாரணமாக, ஒரு தரப்பு வன்பொருள் விற்கையில், மறுதரப்பு மென்பொருளை விற்கும்)<br><br>**amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, அனைத்து தொழில் பங்குதாரர்களும் amfori BSCI செயல்முறையில் இணைக்கப்படவேண்டும் என்ற அவசியமில்லை, ஆனால் குறைந்தபட்சம் முக்கியமானத் தொழில் பங்குதாரர்கள் ஈடுபடுத்தப்பட்டாக வேண்டும்.**<br><br>இந்த இடத்தில், 'முக்கியமான' என்பது தொழில் பங்குதாரர்களைக் (குறிப்பாக உற்பத்தியாளர்களைக்) குறிக்கிறது. அவர்கள் யாரெனில்:<br><br>ஒரு கொடுக்கப்பட்ட வகை வணிகம் அல்லது சேவையின் பிரதான வழங்குநர்கள்; அல்லது கொள்முதல் அளவில் ஒரு பெரிய பங்கை வகிக்கும் அல்லது நல்ல புரிதல் கொண்டவர் என்ற நற்பெயர் பெற்ற; அல்லது<br><br>எதிர்மறையான மனித உரிமைகள் தாக்கங்களின் (குறிப்பாக தொழிலாளர் சம்பந்தப்பட்டவை) முக்கியமான இடர்களில் சாத்தியமானவர் என்று அடையாளம் காணப்பட்டவர்கள்.<br><br>கண்காணிப்பு செயல்முறைக்கு இலக்காகும் பார்வையாளர்களைப் பற்றிய கூடுதல் தகவலுக்கு, "தணிக்கை"யின் வரையறையைப் பார்க்கவும். |

**அளவீட்டுக் கூட்டங்கள்**

தணிக்கை நடைமுறைகள் மற்றும் அளவுகோல்கள் பற்றிய தங்கள் விளக்கங்களைத் தணிக்கையாளர்கள் விவாதிக்கக்கூடிய, அங்கீகாிக்கப்பட்ட தணிக்கை செய்யும் நிறுவனங்களுடன் amfori BSCI -ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டங்கள். இந்தக் கூட்டங்கள், amfori BSCI -இன் நோக்கம், பார்வை மற்றும் எதிர்பார்ப்புகளின் சரியான விளக்கத்தைத் தணிக்கையாளர்கள் பின்பற்றுவதை உறுதி செய்கின்றன. அத்துடன் தணிக்கை சாதனங்கள் மற்றும் தணிக்கை முறைகள் மீதான ஒரு முழுமையான புரிதலை உருவாக்குகின்றன.

**திறன் கட்டமைத்தல்**

பிரச்சினைகள் மற்றும் அவற்றைத் தீர்ப்பதற்கான கண்ணோட்டம், அறிவு மற்றும் அனுபவத்தைப் பெறுவதற்கும் மற்றும் மாற்றங்களை செயல்படுத்துவதற்கும் ஒரு தனிநபர் அல்லது குழுவுக்கு உதவும் ஒரு செயல்முறை.

amfori BSCI பங்கேற்பாளர்கள் மற்றும் அவர்கள் தொழில் பங்குதாரர்களுக்கு (குறிப்பாக கண்காணிப்பு அமைப்பில் ஈடுபடுத்தப்பட்ட உற்பத்தியாளர்களுக்கும்) தங்கள் அன்றாட நடவடிக்கைகளில் சமூக இணக்கத்தை ஒருங்கிணைப்பதற்கான திறமைகள் மற்றும் திறன்களை மேம்படுத்த, amfori BSCI திறன் கட்டமைத்தல் நடவடிக்கைகளை ஏற்பாடு செய்கிறது.

**தொடர் விளைவு**

ஒரு கலந்துரையாடல் தொகுப்பு அல்லது ஒன்றோடொன்று சார்ந்த கூறுகள், அல்லது உறவுகள் ஆகியவற்றைப் பாதிக்கும் ஒரு செயல் காரணமாக உண்டாகும் எதிர்பாராத “தொடர் நிகழ்வுகள்”.

இந்தத் தொடர் விளைவு அதிகரிக்கும் வேகத்துடன், போகப்போக அதை நிறுத்துவது கடினம் என்ற அளவில் மேலும் அதிகரித்துக்கொண்டே இருக்கும் வேகத்துடன் கூடிய தொடர் நிகழ்வுகளுக்கு வழிவகுக்கலாம். amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, amfori BSCI பங்கேற்பாளர்கள், தங்களது தொழில் பங்குதாரர்களுக்கு amfori BSCI நடத்தை விதிகளைக் கடைப்பிடிப்பதற்காக **ஒரு நேர்மறையான தொடர் விளைவை ஊக்குவிக்க** முயற்சிக்கிறார்கள்.

**சான்றளிப்பு**

சில நிறுவப்பட்ட அளவுகோள்களைப் பூர்த்தி செய்யும் ஒரு தனிநபர், நிறுவனம், செயல்முறை, சேவை அல்லது தயாரிப்புக்கு ஒரு மூன்றாம் தரப்பு நிறுவனம் அங்கீகாரமளிக்கும் செயல்முறை.

amfori BSCI என்பது பலதுறைகளைச் சார்ந்த ஒரு அணுகுமுறையாகும், இது வழங்கல் சங்கிலியில் சுற்றுச்சூழல் செயல்திறனை மேம்படுத்துவதற்கு amfori BSCI பங்கேற்பாளர்கள் மற்றும் அவர்களது தொழில் பங்குதாரர்களுக்கு உதவுகிறது. amfori BSCI தணிக்கைகள் ஒரு சான்றிதழுக்கு வழிவகுக்காது, ஆனால் அவை முன்னேற்றங்களை அடைய amfori BSCI -இன் பிற கூறுகளுடன் இணைந்து செயல்படுகின்றன.

**குழந்தை**

**குழந்தை உரிமைகள் மரபின்** கீழ், குழந்தை என்றால் பதினெட்டு வயதுக்கும் குறைவான ஒவ்வொரு மனிதனும் ஒரு குழந்தை என்பது பொருள், குழந்தைக்கு பொருத்தமான சட்டத்தின் கீழ் மெஜாரிடி முன்னதாகவே வந்திருந்தால் தவிர. "குழந்தைகள்" மற்றும் "இளம் தொழிலாளிகள்" உட்பட அனைத்துச் சிறார்களுக்கும் பாதுகாப்பு வழங்குவதை இந்த மரபு நோக்கமாகக் கொண்டுள்ளது.

amfori BSCI -இன் நோக்கங்களுக்காக,15 வயதுக்குக் குறைவான அல்லது கட்டாயப் பள்ளிக்கூடம் செல்வதை நிறைவுசெய்யும் வயதிற்குட்பட்ட (எது அதிகமோ அது) அனைத்து நபர்களுக்கும் இந்த சொல் பொருந்தும், பொருளாதாரம் மற்றும் கல்வி வசதிகள் போதுமானதாக இல்லாத சில நாடுகளில் குறைந்தபட்ச வயது 15-க்கு குறைவாக இருக்கலாம். விதிவிலக்கான இந்த நாடுகளில் சம்பந்தப்பட்ட நாட்டின் சிறப்பு விண்ணப்பத்திற்கு பதிலளித்து, முதலாளிகளுக்கும், தொழிலாளிகளுக்குமான பிரதிநிதித்துவ அமைப்புக்களுடன் ஆலோசனை செய்த பிறகு அந்த நாடுகளை ILO குறிப்பிட்டுள்ளது.

**குழந்தை தொழிலாளர்**

குழந்தைகளிடமிருந்து அவர்களது குழந்தைப் பருவம், ஆற்றல், மரியாதை ஆகியவற்றைப் பறிப்பதோடு, அவர்களின் உடல் மற்றும் மனவளர்ச்சிக்குத் தீங்கை விளைவிக்கும் வேலைகளை இந்தச் சொல் குறிக்கிறது. மன ரீதியாக, உடல் ரீதியாக, சமூக ரீதியாக அல்லது ஒழுக்க ரீதியாக ஆபத்தான, குழந்தைகளுக்குத் தீங்கு விளைவிக்கும், அவர்களின் பள்ளிப் படிப்பைத் தடை செய்யும் வேலையை இது குறிக்கிறது. இதனால்:

பள்ளிக்கூடம் செல்வதற்கான வாய்ப்பை அவர்கள் இழக்கின்றனர்;

முன்கூட்டியே பள்ளியை விட்டு வருமாறு கட்டாயப்படுத்தப்படுகின்றனர்; அல்லது

அதிகப்படியான, நெடுநேர மற்றும் கனமான வேலைகளுடன் பள்ளிக்கூட வருகையையும் அவர்கள் இணைக்க வேண்டியதாகிறது.

**குழந்தை தொழிலாளர் தீர்வு**

இது, தடுப்பு மற்றும் திருத்தச் செயல்பாட்டுத் திட்ட நடவடிக்கைகள் இணைந்த ஒரு நடைமுறையாகும். குழந்தை தொழிலாளர் சேர்க்கையைத் தவிர்ப்பதற்கு தடுப்பு நடவடிக்கைகள் வழிவகுக்கின்றன. திருத்தச் செயல்பாட்டுத் திட்ட நடவடிக்கைகள், குழந்தை தொழிலாளர் கண்டுபிடிக்கப்பட்டால், நிலைமையைச் சீர் செய்து மேம்படுத்துவதற்காக உத்தேசிக்கப்பட்டவை.

தொழில் பங்குதாரர்கள், குறிப்பாகக் கண்காணிக்கப்படுவர்கள், பணியிடத்தில் குழந்தை தொழிலாளர் தீர்வு நடைமுறையை மேற்கொள்ள வேண்டும். இதில் உள்ளடங்கிய குறைந்தபட்ச தீர்வுகள்: a) ஒரு வலுவான வயது சரிபார்ப்பு; b) நீண்டகாலத் தீர்வுகளை ஊக்குவிப்பதில் வெளிப்புற ஆதரவை நாடுவது; c) குழந்தையைப் பள்ளிக்கூட அமைப்புக்குத் திருப்பி அனுப்புவது மற்றும் உற்பத்தித் தளத்தில் இருந்து அந்தக் குழந்தை வெளியேற்றப்பட்டதை உறுதி செய்வது.

**குழந்தை தொழிலாளர்** ஒரு அடிப்படை **மனித உரிமை மீறலாகும்**. இதனால், பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடு தேவைப்படலாம்.

**நடத்தை விதி**

amfori BSCI பங்கேற்பாளர்களின் நம்பிக்கைகள் மற்றும் தங்கள் வழங்கல் சங்கிலியில் உள்ள தொழில் பங்குதாரர்கள் மீது கொண்ட எதிர்பார்ப்புகளைப் பிரதிபலிக்கும் மதிப்புகள் மற்றும் கொள்கைகளின் முறையான அறிக்கை. இந்த விதியானது, பொதுவினில் கிடைக்கக்கூடியது. வணிக நிறுவனங்களின் நடவடிக்கைகளில், அவர்கள் தொழிலை நடத்தும் விதம் பற்றி அறியும் ஓர் ஆர்வம் கொண்ட எவர் ஒருவருக்கும் வழங்கப்படுகிறது. நடத்தை விதிகள், பின்னிணைப்புகளோடு (அமல்படுத்துதல் விதிமுறைகள், amfori BSCI குறிப்பு மற்றும் amfori BSCI சொற்களஞ்சியம்) சேர்த்து வாசித்துப் புரிந்துகொள்ளப்பட வேண்டும்.

**புகார்**

இது ஒரு சட்டபூர்வமற்ற மற்றும் சட்டபூர்வமான அர்த்தம் கொண்டிருக்கலாம். ஒரு சட்டபூர்வமற்ற விஷயமாக, ஒரு அமைப்பு, ஒரு வணிக நிறுவனம் அல்லது ஒரு தனிநபரால் எழுப்பப்பட்ட எதிர்பார்ப்புகள் திருப்திகரமாக இல்லை அல்லது பூர்த்தி செய்யப்படவில்லை என்கிற ஒரு புகார் அல்லது குற்றச்சாட்டை வெளிப்படுத்துவதைக் குறிக்கிறது.

ஒரு சட்டபூர்வமான விஷயமாக, புகாரளிப்பவர் மற்றொரு தரப்பிற்கு எதிராக ஒரு உரிமைகோரலை கொண்டுவரப் போதுமானதாகவும் ஒரு தீர்வைப் பெறுவதற்குச் சாதகமான உண்மைகள் மற்றும் சட்டபூர்வமானக் காரணங்கள் தம்மிடம் இருப்பதாக புகாரளிப்பவர் நம்புகின்ற, முறையான சட்ட ஆவணத்தைக் குறிக்கிறது.

| | |
|---|---|
| **உடந்தை** | இது ஒரு சட்டபூர்வமற்ற மற்றும் சட்டபூர்வமான அர்த்தம் கொண்டிருக்கிறது. ஒரு சட்டபூர்வமற்ற விஷயமாக, வணிக நிறுவனங்கள், மற்றொரு தரப்பின் செயல்களில் "உடந்தையாக" இருப்பதாக உணரப்படலாம், உதாரணமாக, அந்தத் தரப்புச் செய்த ஒரு துஷ்பிரயோகத்திலிருந்து இவர்கள் பயனடையும்போது.<br><br>ஒரு சட்டப்பூர்வமான விஷயமாக, உடந்தை என்பது மற்றொரு வணிக நிறுவனம், அரசாங்கம், தனிநபர், குழு போன்றவற்றிற்கு இடையூறு விளைவிப்பதைக் குறிக்கிறது. மனித உரிமைகள் துஷ்பிரயோகத்தில் குற்றத்திற்கு உடந்தையாக இருக்கும் அபாயம், வலிமையற்ற ஆளுமை மற்றும்/அல்லது மனித உரிமைகள் துஷ்பிரயோகம் பரவலாக உள்ள பகுதிகளில் குறிப்பாக அதிகமாக இருக்கலாம்.<br><br>உடந்தை பொதுவாக 2 அம்சங்களைக் கொண்டது:<br><br>ஒரு வணிக நிறுவனத்தால் அல்லது ஒரு வணிக நிறுவனத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு தனிநபரால் நிகழும் ஒரு செயல் அல்லது விடுபடுதல் (செயல்படத் தவறுதல்). அது மனித உரிமைகள் துஷ்பிரயோகத்திற்கு ஏதோ ஒரு வழியில் ஒருவருக்கொருவர் “உதவி செய்யும்” (எளிதாக்குதல், சட்டபூர்வமாக்குதல், உதவுதல், ஊக்குவித்தல், முதலியன), மற்றும்<br><br>தனது செயல் அல்லது விடுபடுதல் இத்தகைய உதவிகளை வழங்க முடியும் என்கிற வணிக நிறுவனங்களின் அறிவு. |
| **கட்டாயக் கல்வி** | ஒவ்வொரு நபருக்கும் தேவைப்படும் கல்விக்கான காலம், இதன் நீட்டிப்புச் சட்டத்திற்குச் சட்டம் மாறுபடும். இது கல்விக்கான உரிமையை உறுதிப்படுத்துவதற்கானது. இது தானாகவே ஒரு உரிமை ஆகும், மற்றும் இது ஒரு **உரிமைக்கு வழிவகுப்பது ஆகும்**. தமது உரிமைகளைப் பாதுகாக்கும் திறமைகள், திறன் மற்றும் நம்பிக்கையை தனிநபர்களுக்கு கல்வி வழங்குகிறது. தகவல்களை அணுகுவதற்கும் அவற்றைச் சுதந்திரமாக ஆய்வு செய்வதற்குமான திறனை மக்களுக்கு கல்வி வழங்குகிறது. |
| **நுகர்வோர்** | தன்னுடைய சொந்த உபயோகத்திற்காகப் பொருட்கள் மற்றும் சேவைகளை வாங்குவோர். |
| **திருத்தச் செயல்பாடு** | amfori BSCI -இன் சூழலில், திருத்தச் செயல்பாடு என்பது, amfori BSCI நடத்தை விதியிலிருந்து தற்போதிருக்கும் விலகலின் காரணம்(களை) நீக்குவது அல்லது மட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள், அல்லது அமைப்பு மாற்றங்களை அமல்படுத்துவதைக் குறிக்கிறது. |
| **திருத்தச் செயல்பாட்டுத் திட்டம் (CAP)** | தணிக்கையின்போது கண்டுபிடிக்கப்படும் பிழைகளைச் சரி செய்யத் தேவையான நடவடிக்கைகளின் திட்டம். நடவடிக்கைகளை அமல்படுத்த வேண்டிய பொறுப்புள்ள நபரும், கால அளவின் வரம்பும் இதில் சேர்க்கப்பட வேண்டும். |
| **நாடுகள் இடர் வகைப்பாடு** | amfori BSCI பங்கேற்பாளர்கள், அவர்களின் கொள்முதல் நாடுகளுடன் தொடர்புடையச் சாத்தியமான சமூக இடர்கள் மற்றும் அமல்படுத்துதல் முன்னுரிமைகள் ஆகியவற்றை நன்கு அடையாளம் காண்பதில் உதவுவதற்காக, amfori BSCI -ஆல் உருவாக்கப்பட்ட ஒரு சாதனம். |
| **முக்கிய பிரச்சினைகள்** | வழக்கமாக, அடிப்படை ILO மாநாடுகள் (முக்கிய மாநாடுகள்) தொடர்பான அல்லது amfori BSCI அமைப்புக்குள் முக்கியமானவையாக உணரப்படும் பிரச்சனைகள் தொடர்பானவை. ஏனெனில்:<br><br>• அவை, தொழிலாளர்கள் பாதுகாப்பிற்கு உடனடி இடர் அல்லது உயிர் மற்றும் அங்கங்களுக்கு ஆபத்தைத் தருகின்றன அல்லது தொழிலாளர்களின் மனித உரிமைகளில் ஒரு குறிப்பிடத்தக்க மீறலை உண்டாக்குகின்றன, மற்றும்/அல்லது,<br><br>• மோசடி, வற்புறுத்தல், ஏமாற்றுதல் அல்லது குறுக்கீடு மூலம் தணிக்கைப் பாதையைத் திசை திருப்பும் ஒரு முயற்சியை அவை அளிக்கின்றன. |

**வாடிக்கையாளர்**

ஒரு கடை அல்லது தொழிலிருந்து பொருட்கள் அல்லது சேவைகளை வாங்கும் ஒரு நபர். அல்லது ஒரு வணிகப் பேரம் பேச வேண்டிய, ஒரு குறிப்பிட்ட வகையான ஒரு நபர்.

**கண்ணியமான வேலை**

மக்களுக்குத் தங்கள் பணி வாழ்க்கைகளில் உள்ள அபிலாஷைகளின் கூட்டு. ஆக்க வளம் தரும், மற்றும் நியாயமான வருமானம், பணியிடத்தில் பாதுகாப்பு மற்றும் குடும்பங்களுக்கான சமூகப் பாதுகாப்பு ஆகியவற்றை வழங்கும் வேலைவாய்ப்புகளை இது உள்ளடக்குகிறது. தனிப்பட்ட அபிவிருத்தி மற்றும் சமூக ஒருங்கிணைப்பு, மக்களுக்குத் தங்களின் அக்கறையையும் சம வாய்ப்புகளையும் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம், அனைத்துப் பெண்களுக்கும் ஆண்களுக்கும் சமமான வாய்ப்பளித்து சமமாகப் பாவிப்பது ஆகிய சிறந்த வாய்ப்புகள் இதில் உள்ளன.

**வாழுமிட வசதி**

தொழிலாளர்களுக்குப் பாதுகாப்பான வாழும் இட வசதிகளை வழங்கும் ஒரு அமைப்பு. இது முதலாளிகளால் வழங்கப்படுகிறது மற்றும் இது பணியிடத்திலோ அல்லது அதற்கு வெளியிலோ இருக்கலாம். வீடுகள் எனவும் அறியப்படும்.

**தகுந்த விழிப்புணர்வு**

மற்றவர்களுக்குத் தீங்கு நேரலாம் என்று கணிக்கப்படும் எந்தவொரு செயலையும் செய்யும்போது **நியாயமான கவனத்** தரத்துடன் பின்பற்ற வேண்டிய பல தடுப்பு நடவடிக்கைகளை இது குறிக்கிறது.

ஒரு நியாயமான கவனிப்பு என்பது, அதே அல்லது அதேபோன்ற சூழ்நிலைகளில் ஒரு "நியாயமான நபர்" காட்டக்கூடிய ஈடுபாட்டைக் குறிக்கிறது. ஒரு "நியாயமான நபர்" என்பவர், ஒரு சமூகத்தின் வழக்கமான மாதிரி உறுப்பினராக (எ.கா. வணிக நிறுவனங்கள்) மற்றவர்களுக்குத் தீங்கு தரும் (செயல் அல்லது செயலற்ற தன்மை வழியாக) அச்சுறுத்தல் இருக்கும் சூழ்நிலைகளில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்ற **தொடர்புடைய ஒரு சமுதாயத்தின் தீர்ப்பின்** ஒரு கலவை ஆவார்.

பாதுகாப்புக் கடமை என்பது தனிநபர்களுக்கும் வணிக நிறுவனங்களுக்கும் சமுதாயத்தினுள் மற்றவர்கள் மீதான மறைமுகப் **பொறுப்புக்களை** உள்ளடக்கியது. ஆகவே, சட்டத்தினால் அது தேவையா அல்லது இல்லையா என்பதைப் பொருட்படுத்தாமல் எதிர்பார்க்கப்படுகிறது.

**உமிழ்வுகள்**

amfori BSCI தணிக்கைச் சூழலில், இது, சுற்றுச்சூழலுக்கு எந்தச் சாத்தியமான சேதத்தையும் தவிர்க்க, போதுமான அளவு நிர்வகிக்கப்பட வேண்டிய, எரிபொருள் வாயு அல்லது வெளியேற்ற வாயுவைக் குறிக்கிறது.

**ஊழியர்**

ஒரு **வேலை வாய்ப்பு ஒப்பந்தத்தின்** விதிமுறைகளின் கீழ், ஒரு நிறுவனத்திற்காக வேலை செய்யும் ஒரு நபர். ஒரு வேலைவாய்ப்பு ஒப்பந்தம் வாய் மொழியாகவோ, எழுத்திலோ, மறைமுகமாகக் குறிப்பால் உணர்த்தும்படியோ இருக்க முடியும். amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, ஊழியர்கள் மற்றும் தொழிலாளர்கள் (பருவகால அல்லது நிரந்தரமாக) இருவருமே "தொழிலாளி" என்ற ஒரே சொல்லில் குறிக்கப்படுகின்றனர்.

**சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பு**

நிறுவனத்தின் சுற்றுச்சூழல் நோக்கங்களை உருவாக்குவதற்கும் வழங்குவதற்கும் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கத்தைக் கொண்ட செயல்பாடுகளை நிர்வகிப்பதற்குமான ஒரு முறையான அணுகுமுறை. ஒரு சுற்றுச்சூழல் மேலாண்மை அமைப்பானது (EMS) நிறுவனத்தின் கட்டமைப்பு, செயல்பாடுகள் மற்றும் சுற்றுச்சூழல் தாக்கங்களை ஏற்படுத்தும் செயல்பாடுகளின் மதிப்பீடு ஆகியவற்றை உள்ளடக்கும். கூடுதலாக தொடர்புடைய சட்ட மற்றும் ஒழுங்குமுறை சுற்றுச்சூழல் பொறுப்புகள, நோக்கங்கள், பயிற்சி மற்றும் மதிப்பீடுகள் போன்றவையும் உள்ளடக்கப்படலாம்.

**Foreign Trade Association (FTA)**

வெளிநாட்டு வர்த்தகச் சங்கம் (amfori) என்பது தடையற்ற மற்றும் நீடித்த வர்த்தகத்தின் மதிப்புகளைக் குறிக்கும் ஐரோப்பிய மற்றும் சர்வதேச வர்த்தகத்தின் கூட்டமைப்பு ஆகும். நூற்றுக்கணக்கான சில்லறை விற்பனையாளர்கள், இறக்குமதியாளர்கள், பிராண்ட் நிறுவனங்கள் மற்றும் தேசியச் சங்கங்கள் ஆகியோரை அரசியல் மற்றும் வர்த்தகத்திற்கானச் சட்டக் கட்டமைப்பைப் பொறுப்புடன் மேம்படுத்துவதற்காக, இது ஒன்றாகக் கொண்டு வருகிறது.

| | |
|---|---|
| **amfori இயக்குனர்கள் குழுமம்** | குறைந்தபட்சம் இரண்டு, அதிகபட்சம் பத்து சாதாரண உறுப்பினர்களைப் பிரதிநிதிகளாகக் கொண்டிருக்கும் வெளிநாட்டு வர்த்தகச் சங்கத்தை நிர்வகிக்கும் குழு. |
| **amfori நிதிக் குழு** | amfori இயக்குனர்கள் குழுவிலிருந்து மூன்று பேரை (பொருளாளர் + இரண்டு இதர உறுப்பினர்கள், அவர்களில் ஒருவர் amfori BSCI வழிநடத்தும் குழுவில் பணிபுரிபவராக இருக்க வேண்டும்) உறுப்பினர்களாகக் கொண்ட, நிதிப் பிரச்சினைகளில் கவனம் செலுத்தும் குழு. |
| **amfori பொதுச் சபை** | அனைத்துக் கூட்டாளிகள் மற்றும் சாதாரண உறுப்பினர்கள் அடங்கிய வருடாந்திர சபை. வணிக நிறுவனம் அல்லது சங்கத்தின் வருவாயைப் பொறுத்து, அனைத்து வாக்குகளும் எடையிடப்பட்ட வாக்களிக்கும் முறையை அடிப்படையாகக் கொண்டவை. |
| **அடிப்படை சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மாநாடுகள் (முக்கிய மாநாடுகள்)** | சர்வதேச தொழிலாளர் அமைப்பின் ஆளுமைக் குழு, அடிப்படைக் கொள்கைகள் மற்றும் பணியில் உரிமைகள் எனக் கருதப்படும் **எட்டு மாநாடுகளை** இனம் கண்டுள்ளது: *சங்கத்திற்கானச் சுதந்திரம் மற்றும் கூட்டு பேரம் பேசுவதற்கான உரிமையைத் திறம்பட அங்கீகரித்தல்; கட்டாயப்படுத்தப்பட்ட அல்லது வலுக்கட்டாய உழைப்பின் அனைத்து வகைகளையும் நீக்குதல்; குழந்தை தொழிலாளரைத் திறம்பட நீக்குதல்; மற்றும், வேலைவாய்ப்பு மற்றும் பணியில் பாகுபாடு நீக்குதல்.*<br><br>இந்தக் கோட்பாடுகள், சர்வதேச தொழிலாளர் அமைப்பின், அடிப்படைக் கொள்கைகள் மற்றும் பணியில் உரிமைகள் மீதான பிரகடனம் (1998)-இல் உள்ளடக்கப்பட்டுள்ளன. தற்போது, இந்த மாநாடுகளின் ஒப்புதல்களின் எண்ணிக்கை, சாத்தியமான மொத்தத்தில் 86 சதவீதத்தைக் குறிக்கிறது.<br><br>ஒப்புதல் அளிக்கும் நாடுகள் (பார்க்க: http://www.ilo.org/ilolex/english/newratframeE.htm) இந்தக் கொள்கைகளைத் தங்கள் தேசியச் சட்டத்தில் பயன்படுத்தி பின்பற்றுவதற்கும், முறையான இடைவெளிகளில் பயன்பாட்டினைப்பற்றிய அறிக்கை அளிப்பதற்கும் தாங்களாகவே ஒப்புக்கொள்கிறார்கள். |
| **குறைதீர்ப்பு நடைமுறை** | ஒரு குறைதீர்க்கும் வழிமுறையானது, ஒரு **நீதித்துறைச் சாராத நடைமுறை**. இது வழங்கும் முறைப்படுத்தப்பட்ட வழிகள் மூலம், தனிநபர்கள் அல்லது குழுக்கள், ஒரு வணிக நிறுவனம் தங்கள் மீது ஏற்படுத்திய தாக்கத்தைப் பற்றியக் கவலைகளை எழுப்புவதன் மூலம் - தங்கள் மனித உரிமைகள் மீது உட்பட, ஆனால் அது மட்டுமே பிரத்யேகமாக அல்ல - தீர்வு காண முடியும்.<br><br>இந்த வழிமுறைகள், விவேகமான, உரையாடல்-அடிப்படையிலான அல்லது கலாச்சாரப்படி சரியானதாகவும் மற்றும் உரிமைகளுக்கு இணக்கமானவையாகவும் உள்ள பிற செயல்முறைகளைப் பயன்படுத்தலாம்.<br><br>ஐக்கிய நாடுகள் சபையின் கூற்றுப்படி, ஒரு குறைதீர்க்கும் வழிமுறை பயனுள்ளதாக அமைய, அது **சட்டபூர்வமாக, அணுகக்கூடியதாக, முன்கூட்டியேக் கணிக்கக்கூடியதாக, சமமாக, வெளிப்படையாக, உரிமைகளுக்கு இணக்கமாக மற்றும் ஒரு தொடர்ச்சியான கற்றல் ஆதாரமாக இருக்க வேண்டும்.** |
| **வீட்டுத் தொழிலாளி** | ஒரு வணிக நிறுவனத்தில் நேரடி அல்லது மறைமுக ஒப்பந்தத்தின் கீழ், வணிக நிறுவனத்தின் வளாகத்தினுள் இல்லாமல், ஊதியம் பெறுவதற்காகப் பணிபுரியும் ஒரு நபர். முதலாளி கேட்கும் ஒரு தயாரிப்பு அல்லது சேவையை, அதற்குத் தேவையான உபகரணங்கள் அல்லது மற்ற உள்ளீடுகளை யார் வழங்குகிறார் என்பதைப் பொருட்படுத்தாது வழங்குதலே இதன் விளைவாகும். |
| **மனித உரிமைகள்** | இவ்வுலகில் சுதந்திரம், நீதி மற்றும் அமைதிக்கான அஸ்திவாரமாக, மனிதக் குடும்பத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும், இயற்கையான கண்ணியம் மற்றும் சமமான மற்றும் மாற்றமுடியாத உரிமைகளை அங்கீகரிப்பதன் அடிப்படையில், மனித உரிமைகள் பற்றிய உலகளாவிய பிரகடனத்தில் (1948) வரையறுக்கப்பட்டுள்ள கோட்பாடுகளின் ஒரு தொகுப்பு. |

**மனித உரிமைகள் தகுந்த விழிப்புணர்வு**

எதிர்மறையான மனித உரிமைத் தாக்கங்களை அவர்கள் எப்படி எதிர்கொள்கிறார்கள் என்பதைக் கண்டறிவதற்காக, தடுப்பதற்காக, குறைப்பதற்காக மற்றும் கணக்கீடு செய்வதற்காக வணிக நிறுவனங்களால் நடத்தப்பட்டாக வேண்டிய செயல்முறை. தனது சொந்த நடவடிக்கைகள் மூலமோ அல்லது தன்னுடைய வணிக உறவுகளால் அதனுடைய நடவடிக்கைகள், தயாரிப்புகள் அல்லது சேவைகளுடன் நேரடியாக இணைக்கப்படுவதன் மூலமோ, அந்த வணிக நிறுவனத்திற்கு உண்டாகும் எதிர்மறை மனித உரிமைத் தாக்கங்களைக் கட்டாயமாக அந்தச் செயல்முறையில் அது சேர்க்க வேண்டும்.

**இறக்குமதியாளர்**

பொருட்களை விற்கும் வணிக நிறுவனம். அவர்கள் பொருட்களை உற்பத்தி செய்வதில்லை. பொருட்களின் விநியோகங்கள் ஐரோப்பிய ஒன்றியத்திற்கு உள்ளே அல்லது வெளியே செய்யப்படுகின்றன. amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, ஒரு இறக்குமதியாளர் amfori BSCI பங்கேற்பாளர் அல்லது ஒரு தொழில் பங்குதாரராக இருக்கலாம்.

**சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO)**

சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ள ஒரு சர்வதேச அமைப்பு, அனைத்து ஆண்கள் மற்றும் பெண்களுக்குக் கண்ணியமான வேலையை ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும். ILO ஒரு முத்தரப்பு அணுகுமுறையைக் கொண்டது எனவே, தொழிலாளர்கள், முதலாளிகள் மற்றும் அரசாங்கங்களால் உறுப்பினர் நாடுகள் பிரதிநிதித்துவம் செய்யப்படுகின்றன.

**சர்வதேச தொழிலாளர் அமைப்பு மாநாடுகள்**

சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO), சர்வதேச தொழிலாளர் தரநிலைகளை அமைப்பதற்கானப் பொறுப்பைக் கொண்டுள்ளது. இது, **சர்வதேச தொழிலாளர் தரநிலைகள் மற்றும் அவற்றின் விளக்கம் ஆகியவற்றிற்கு சட்டபூர்வமான ஆதாரமாகும்.**

சர்வதேசச் சட்டத்தின் வலிமை கொண்டு, மற்றும் அவற்றை ஏற்றுக்கொண்ட மாநிலங்களைக் கட்டுப்படுத்தி, மற்றும் பரிந்துரைகளில் கூடுதல் விளக்க வழிகாட்டலை வழங்கும் தரநிலைகள் சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மாநாடுகளில் அமைக்கப்பட்டுள்ளன.

குறிப்பாக, சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) அனைத்து உறுப்பு நாடுகளும், ஒப்புதலைப் பொருட்படுத்தாமல், **அடிப்படை சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மாநாடுகளில் உள்ள கோட்பாடுகளை மதிப்பதற்கு, ஊக்குவிப்பதற்கு மற்றும் புரிந்துகொள்வதற்குக் கடமைப்பட்டுள்ளன.**

சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) மாநாடுகள், பரிந்துரைகள் மற்றும் விளக்கங்கள், வழிகாட்டுதல்களை amfori BSCI முடிந்த அளவு அதிக அளவில் எடுத்துக்கொள்கிறது.

**சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ILO) பரிந்துரைகள்**

அவை, சர்வதேச தொழிலாளர் தரநிலைகளை எதிர்கொள்வதற்காகவும், அடிப்படைக் கொள்கைகள், மற்றும் பணியில் உரிமை ஆகியவற்றை அமைப்பதற்காகவும், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் உறுப்புகளால் (அரசுகள், முதலாளிகள் மற்றும் தொழிலாளர்கள்) வரையப்பட்ட சட்டக் கருவிகள் ஆகும். உறுப்பு நாடுகளால் ஒப்புக்கொள்ளப்படக்கூடிய சர்வதேச உடன்படிக்கைகளைச் சட்டபூர்வமாகக் கட்டுப்படுத்தும், சர்வதேச தொழிலாளர் அமைப்பு (ILO) மாநாடுகளுக்கு மாறாக, ILO பரிந்துரைகள் கட்டுப்படுத்தாத வழிகாட்டுதல்களாகச் சேவை புரிகின்றன.

பல சந்தர்ப்பங்களில், ஒப்புக்கொள்ளும் நாடுகளால் அமல்படுத்த வேண்டிய அடிப்படைக் கொள்கைகளை ஒரு மாநாடு கைவிடுகிறது, அது எவ்வாறு பயன்படுத்தப்படலாம் என்பதைப் பற்றிய இன்னும் விரிவான வழிகாட்டுதல்களை வழங்கும் ஒரு சம்பந்தப்பட்ட பரிந்துரையைக் கொண்டு நிரப்பும்போது.

பரிந்துரைகள் சுய ஆளுமை பெற்றவையாக இருக்கலாம், அதாவது எந்த மாநாட்டுடனும் இணைக்கப்படாமல்.

**உள் சமூக மேலாண்மை அமைப்பு (ISMS)**

கீழ்க்கண்ட உற்பத்தி அடுக்குகளை amfori BSCI நடத்தை விதியின் மதிப்புகள் மற்றும் கொள்கைகளுக்குள் அடுக்குவதற்காக பிரதான தணிக்கையால் அமல்படுத்தப்படவேண்டிய கொள்கைகள் மற்றும் நடைமுறைகளின் ஒரு சக்தி வாய்ந்த தொகுப்பு.

| | |
|---|---|
| **தொழிலாளர்-மட்டுமே ஒப்பந்தம்** | ஒப்பந்ததாரர் அல்லது துணை ஒப்பந்ததாரர், வெறுமனே ஆள் சேர்க்கும், ஆட்களை வழங்கும், அல்லது ஒரு பணி, வேலை அல்லது ஒரு முதலாளிக்காக சேவை செய்யத் தொழிலாளர்களை நியமிக்கும் ஒரு தடைசெய்யப்பட்ட ஏற்பாடு. தொழிலாளர்-மட்டுமே ஒப்பந்தத்தில், பின்வரும் அம்சங்கள் உள்ளன: (a) ஒப்பந்ததாரர் அல்லது துணை ஒப்பந்ததாரர், உண்மையில் தானாகவே மற்றும் தன்னுடைய பொறுப்பில் ஒரு வேலை அல்லது சேவையைச் செய்ய போதுமான பணம் அல்லது முதலீடு இல்லாதவர்; (b) வேலைக்குச் சேர்க்கப்பட்ட, வழங்கப்பட்ட அல்லது இத்தகைய ஒப்பந்ததாரர் அல்லது துணை ஒப்பந்தக்காரரால் நியமிக்கப்படும் பணியாளர்கள், பிரதான நிறுவனத்துடன் நேரடியாகத் தொடர்புடைய வேலைகளைச் செய்கிறார்கள். |
| **சட்டப்படியான குறைந்தபட்ச ஊதியம்** | முதலாளிகள் சட்டபூர்வமாகப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு **வழக்கமான மணிநேர வேலைக்குக்** கொடுக்க வேண்டிய மிகக் குறைந்த மணிநேர, தினசரி அல்லது மாதாந்திர ஊதியம். குறைந்தபட்ச ஊதியம் சட்டபூர்வமாக வரையறுக்கப்படாத நாடுகள், குறைந்தபட்ச ஊதியத்தைக் கூட்டு பேரம் பேசுவதன் மூலம் நிர்ணயிப்பதற்காக முதலாளி குழுக்கள் மற்றும் வர்த்தகச் சங்கங்களைச் சார்ந்திருக்கின்றன. |
| **செல்வாக்கு நிலை** | மற்றவர்களைக் **கட்டுப்படுத்தும் அதிகாரத்தைத்** தரக்கூடிய ஒரு சாதகமான நிலை மற்றும்/அல்லது எதிர்மறைத் தாக்கத்தை ஏற்படுத்தும் அல்லது அதில் பங்களிக்கும் தொழில் பங்குதாரரின் தவறான நடைமுறைகளை **மாற்றும் திறன்**. |
| **நிர்வாகம்** | வரையறுக்கப்பட்ட குறிக்கோள்களை நிறுவுவதற்கும் அடைவதற்குமான ஒருங்கிணைக்கப்பட்ட நடவடிக்கைகள். மேலாண்மை என்னும் சொல், ஒரு வணிக நிறுவனம் அல்லது வியாபார நிறுவனத்தை நடத்துவதற்கும், கட்டுப்படுத்துவதற்குமான அதிகாரம் மற்றும் பொறுப்புணர்வுடன் கூடிய ஒரு நபர் அல்லது குழுவினரைக் குறிக்கும். |
| **கண்காணிப்புச் செயல்முறை** | கண்காணிப்புச் செயல்முறை என்பது ஒரு முறையான அணுகுமுறையாகும். இது வணிக நிறுவனங்கள், செயல்திறமிக்க சிக்கல்களைக் கண்டறிவதற்காகச் சமூகச் செயல்திறனை அளவிடுவதற்கும் பகுப்பாய்வு செய்வதற்கும், மற்றும் அதன் கூட்டாண்மை, சமூகப் பொறுப்புணர்வின் தரம் மற்றும் செயல்திறனை மேம்படுத்துவதற்கான முடிவுகளை எடுக்கத் தரவுகளைப் பயன்படுத்துவதற்கும் உதவுகிறது. amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, கண்காணிப்புச் செயல்முறை, முக்கியமாக amfori BSCI தணிக்கைகள் மூலம் நடத்தப்படுகிறது. |
| **சாதாரண amfori உறுப்பினர்கள்** | இவை, வணிக ரீதியான மற்றும் தொடர்புடைய வர்த்தக நடவடிக்கைகளைக் கொண்ட உலகெங்கிலுமுள்ள நிறுவனங்கள் மற்றும் வர்த்தகச் சங்கங்கள். சாதாரண உறுப்பினர்களுக்கு முழு உறுப்பினர் உரிமைகள் உள்ளன. |
| **தனிப்பட்டப் பாதுகாப்பு சாதனங்கள் (PPE)** | தனிப்பட்டப் பாதுகாப்பு சாதனங்கள் (PPE) என்பது பாதுகாப்பு ஆடை, தலைக்கவசங்கள், கண்ணாடிகள், அல்லது பிற ஆடைகள் அல்லது அணிந்திருப்பவரின் உடலைக் காயத்திலிருந்துப் பாதுகாக்கும் வகையில் வடிவமைக்கப்பட்ட சாதனங்களைக் குறிக்கிறது. பாதுகாப்பு சாதனங்கள், பணி தொடர்பான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் உடல்நலக் காரணங்களுக்காக அணிந்து கொள்ளப்படலாம். தனிப்பட்டப் பாதுகாப்பு சாதனங்களின் நோக்கம், பொறியியல் மற்றும் நிர்வாகக் கட்டுப்பாடுகள் சாத்தியமில்லாதபோது அல்லது ஏற்றுக்கொள்ளத்தக்க அளவிற்கு அபாயங்களைத் திறம்படக் குறைக்க முடியாதபோது, பணியாளர்கள் ஆபத்துக்குட்படுவதைக் குறைப்பதாகும். |

| | |
|---|---|
| **பிரதான உற்பத்தித் தணிக்கை முறை** | ஒரு தணிக்கையின் சமூகச் செயல்திறனை மதிப்பிடுவதற்காக, amfori BSCI -ஆல் உருவாக்கப்பட்ட ஒரு முறையான தணிக்கை அணுகுமுறை. அந்தத் தணிக்கை பல உற்பத்தி அலகுகளைக் கொண்டிருக்கலாம் (அவை சட்டபூர்வமாகத் தனி நிறுவனங்களோ இல்லையோ). முக்கியத் தணிக்கையால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின் செயல்திறனை இது கண்காணிக்கிறது, மற்றும் அதே தணிக்கையின், ஒரு சீரற்ற உற்பத்தி அலகுகள் மாதிரியில் இத்தகைய நடவடிக்கைகளை குறுக்கு சரிபார்ப்பு செய்கிறது.<br><br>பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்தால் மட்டுமே, இந்த முறைமையைப் பயன்படுத்தி ஒரு தணிக்கை செய்யப்படலாம். (i) அந்தத் தணிக்கை, amfori BSCI தணிக்கைக்கு முன்னதாக, அதன் தொழில் பங்குதாரர்களை ஈடுபடுத்தும் மற்றும் கண்காணிப்பதற்கானப் பொறுப்பை எடுத்திருக்க வேண்டும் மற்றும் (ii) அந்தத் தணிக்கை, அதன் தொழில் பங்குதாரர்கள் amfori BSCI நடத்தை விதியில் உள்ள மதிப்புகள் மற்றும் கொள்கைகளைக் கடைபிடிப்பதை நோக்கி வேலை செய்வதை உறுதி செய்வதற்காக, ஒரு செயல்படும் உள் சமூக மேலாண்மை அமைப்பை (ISMS) உருவாக்கியிருக்க வேண்டும்.<br><br>பொதுவாக, இந்த முறைமை, வேளாண்மை நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்குப் பயன்படுகிறது, இது ஒரு பிரமிடு வழியில் கட்டமைக்கப்பட வேண்டும் (எ.கா., ஒரு கட்டுமிடத்திற்குக் (packing house) காய்கறிகளை விநியோகிக்கும் பல பண்ணைகள்). எனினும், இந்த முறைமை, ஒரு குறிப்பிட்ட வணிக நிறுவனம் அதன் வேறு தொழில் பங்குதாரர்களின் (எ.கா. ஒரு சிறிய உற்பத்தி அலகுகளின் நெட்வொர்க்கைக் கண்காணிக்கும் ஒரு தொழிற்சாலை) amfori BSCI தொடர் விளைவைக் கண்காணிப்பதற்குப் பயன்படுத்தப்பட முடியும். இந்த முறைமையைப் பயன்படுத்தி நடத்தப்படும் amfori BSCI தணிக்கைகளை முதன்மை உற்பத்தி பொறுப்பு விதிமுறையின் கீழ் அறிக்கை செய்யப்பட வேண்டும். |
| **சிறைச்சாலைத் தொழிலாளர்** | சுதந்திரமற்ற ஒரு தொழிலாளர் வடிவம். இந்தச் சொல், **இரண்டு வேறுபட்ட கருத்துக்களைக்** குறிக்கலாம்: ஒரு தண்டனையின் வடிவம் மற்றும் ஒரு குற்றவாளியின் பணி வடிவம். |
| **உற்பத்தியாளர்** | amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, ஒரு உற்பத்தியாளர் என்பவர், ஒரு பொருளைத் (உணவு அல்லது உணவு அல்லாத) தயாரிப்பவர் அல்லது தொழிலாளர், இயந்திரங்கள், கருவிகள், இரசாயனங்கள், உயிரி செயல்முறை மற்றும் விதிமுறைப்படுத்துதல் மூலம் மூலப்பொருட்களை உற்பத்தி செய்கின்ற ஒரு amfori BSCI பங்கேற்பாளரின் வழங்கல் சங்கிலியில் உள்ள ஒரு தொழில் பங்குதாரர் ஆவார். |
| **பொறுப்புணர்வு** | amfori BSCI விதியான, மேம்பட்ட செயல்முறை மூலம் தங்களின் தொழில் பங்குதாரர்களை வழிநடத்த, தங்கள் தொழில் பங்குதாரர்களுடன் (குறிப்பாக உற்பத்தியாளர்கள்) இணைந்து பணியாற்றுவதில் ஒரு உயிர்ப்பான பங்கெடுத்தலைப் பின்பற்றும் amfori BSCI பங்கேற்பாளர்களால் அனுசரிக்கப்படும் அந்த **உயிர்ப்பான பங்கு**. **மேற்பார்வைக்கான தேவையின்றி,** நடத்தை விதிகளில் அமைக்கப்பட்டுள்ள முக்கியப் பகுதி, மதிப்புகள் மற்றும் கொள்கைகளின் மீது செயல்படுவது அல்லது முடிவு செய்வதற்கான amfori BSCI பங்கேற்பாளர்களின் திறனை அது நம்பியிருக்கிறது. |
| **இடர்** | ஏற்படும் அபாயத்தின் விளைவாக உயிர், ஆரோக்கியம், சொத்து, மற்றும்/அல்லது சுற்றுச்சூழலுக்கு ஏற்படக்கூடிய சேதத்தின் நிகழ்தகவின் அளவீடு. அபாயம் தாக்கம் மற்றும் சாத்தியத்தின் அடிப்படையில் அளவிடப்படுகிறது. |

| | |
|---|---|
| **இடர் மதிப்பீடு** | அடையாளம் காணப்படும் **ஆபத்துகளின் விளைவாகப் பாதிப்பு ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகளின் ஒரு முறையான மதிப்பீடு**. ஓர் இடர் மதிப்பீடு என்பது, amfori BSCI பங்கேற்பாளர்களுக்கும் மற்றும் அவர்களின் தொழில் பங்குதாரர்களுக்குமான amfori BSCI அமல்படுத்துதலின் ஓர் ஒருங்கிணைந்த பகுதியாகும். இது அவர்ளை amfori BSCI -க்குள் தங்கள் நடவடிக்கைகளை நிர்வகிக்கவும் திட்டமிடவும் அனுமதிக்கிறது. நிகழ்தகவு, தாக்கம் மற்றும் திட்டத்தின் ஒவ்வொரு அறியப்பட்ட அபாயத்தின் விளைவையும், இடரின் போது எடுக்க வேண்டிய திருத்த நடவடிக்கையையும் அவர்கள் ஆய்வு செய்யலாம். |
| **பருவகாலப் பணியாளர்** | பருவகாலப் பணியாளர் என்பவர், ஒரு குறுகிய கால அடிப்படையில் வேலை செய்பவர் அல்லது சில பருவங்களில் மட்டுமே வேலை செய்பவர். ஒரு amfori BSCI தணிக்கைச் சூழலில், அவர்கள் தற்காலிகப் பணியாளர்கள், ஒற்றைப்படைத் தொழிலாளர்கள் அல்லது சாதாரணத் தொழிலாளர்கள் என்று குறிப்பிடப்படுகின்றனர். |
| **சுய மதிப்பீடு** | ஒரு நபர் அல்லது நிறுவனம், தன் செயல்பாடுகளைத் திட்டமிடுகின்ற, நிர்வகிக்கின்ற, செயல்படுத்துகின்ற மற்றும் மதிப்பிடுகின்ற, மற்றும் அடைந்திருக்கும் செயல்திறன் நிலையைத் தீர்மானிக்கின்ற ஒரு **செயல்முறை**.<br><br>amfori BSCI -இன் சூழலில், இது அமல்படுத்துவதற்குத் தயாராவதற்காகத் தகவல்களைச் சேகரிக்கும் செயலாகும். இதற்காகப் பயன்படுத்தப்படும் **சுய மதிப்பீட்டு கேள்வித்தாளை** amfori BSCI உற்பத்தியாளர்களுக்கு வழங்குகிறது. இந்த ஆவணங்களில் சேகரிக்கப்பட்டத் தகவல்கள் ஒரு சுய பிரகடனமே. இவற்றை ஒரு தணிக்கையுடன் ஒப்பிட முடியாது. |
| **சர்வதேச சமூகப் பொறுப்புணர்வு**<br><br>(SAI) | பணியிடங்களை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட, உலகளாவிய தரநிலை-அமைப்பு, லாபத்திற்காக-இல்லாத மனித உரிமைகள் அமைப்பு.<br><br>SAI, சமூகப் பொறுப்புணர்வுக்கான **SA8000 சான்றிதழ் தரத்தை** உருவாக்கியிருக்கிறது, இதுவொரு amfori BSCI “தொழில்துறைக்கு மிகச்சிறந்த நடைமுறை” வழிகாட்டி. |
| **சமூகப் பொறுப்புணர்வு 8000** | SA8000 என்பது ஒரு தன்னார்வ தரநிலையாகும், மற்றும் வணிகத்தின் அனைத்து தொழில்துறைகள் முழுவதும் அல்லது எந்த அளவிலான நிறுவனத்திற்கும் இதைப் பயன்படுத்தலாம். SA8000-இன் குறிக்கோள், சரக்குகள் மற்றும் சேவைகளின் நன்னெறி ஆதாரங்களை உறுதிப்படுத்துவதாகும். இந்தத் தரநிலை, வணிக நிறுவனங்கள் அல்லது தொழில்துறையின் குறிப்பிட்ட சமூகப் பொறுப்புணர்வுக் குறியீடுகளை மாற்றியமைக்கவோ அல்லது அதிகரிக்கவோ முடியும். குழந்தை தொழிலாளர், கட்டாய உழைப்பு, உடல்நலம் மற்றும் பாதுகாப்பு, சங்கத்தின் சுதந்திரம் மற்றும் கூட்டுப் பேரம் பேசும் உரிமை, பாகுபாடு, ஒழுங்குமுறை நடைமுறைகள், வேலை நேரம், ஊதியம் மற்றும் மேலாண்மை அமைப்புகள் ஆகியவற்றிற்கான அடிப்படைத் தரநிலைகளை SA8000 அமைக்கிறது. |
| **சமூகப் பொறுப்புணர்வு அங்கீகாரச் சேவைகள்** | சமூகப் பொறுப்புணர்வு அங்கீகாரச் சேவைகள் (SAAS) என்பது, நெறிமுறைப் பணி நிலைமைக்கானச் சமூகப் பொறுப்புணர்வு 8000 தரநிலை உட்பட சமூகத் தரங்களுடனான இணக்கத்திற்குச் சான்றளிப்பவர்களாக, அங்கீகரிப்பதற்காகவும் கண்காணிப்பதற்காகவும் நிறுவப்பட்ட ஒரு அங்கீகார நிறுவனம் ஆகும். 1997-ஆம் ஆண்டில் சமூகப் பொறுப்புணர்வு சர்வதேச (SAI)-க்குள் ஒரு உள் துறையாக SAAS பணியாற்றத் தொடங்கியது, மற்றும் 2007-ஆம் ஆண்டில் லாபம்-இல்லாத, அதன் சொந்த நிறுவனமாக, முறையாக நிறுவப்பட்டது. |
| **சமூக நலன்** | ஒரு சமூகப் பாதுகாப்பு அமைப்பின் கீழ் செலுத்தப்படும் பலன். |
| **சமூக உரையாடல்** | ஆலோசனை, உரையாடல் மற்றும் கூட்டு பேரம் ஆகியவற்றை ஊக்குவிப்பதற்காகச் சமூகப் பங்குதாரர்களுக்கிடையே நிகழும் ஒரு பரிமாற்றச் செயல்முறை. |

| | |
|---|---|
| **சமூகக் கொள்கை** | ஒரு சமூகத் தரம் மற்றும் அதன் தேவைகள் தொடர்பாக ஒரு நிறுவனத்தின் உலகளாவிய நோக்கங்கள் மற்றும் ஒரு நிறுவனத்தின் வணிக நோக்குநிலை ஆகியவற்றை அமைக்கும் ஒரு எழுதப்பட்ட ஆவணம். amfori BSCI நடத்தை விதிகளின் உள்ளடக்கம் மற்றும் அமல்படுத்துதல் விதிமுறைகளை மேம்படுத்துவதற்காக, வணிக நிறுவனங்கள் இத்தகைய ஒரு ஆவணத்தை உருவாக்க வேண்டுமென amfori BSCI கோருகிறது. |
| **செல்வாக்கு வட்டம்** | amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, ஒரு வணிக நிறுவனம், அதன் தொழில் பங்குதாரர்களுக்கு amfori BSCI நடத்தை விதியில் உட்பொதிக்கப்பட்ட பொறுப்புகளை அமலாக்கம் செய்வதில், செலுத்துகின்ற அதிகாரத்தைக் குறிக்கிறது. செல்வாக்கின் அதிகாரம் *(செல்வாக்குமிக்க, நிறுவன ரீதியான, தூண்டுதலான)* மற்றும் வேறுபட்ட நெட்வொர்க்குகளில் *(முக்கியமான ஆர்வ நெட்வொர்க்; நேரடித் தொடர்புகள் நெட்வொர்க்; உயிர்ப்பான நெட்வொர்க்; தொலைந்த நெட்வொர்க்; எதிர்கால நெட்வொர்க்)* ***வணிக நிறுவனத்தின் நிலைத்தன்மையிலிருந்து கிடைக்கும் செல்வாக்கு*** *வட்டத்தின் அளவு.* |
| **பங்குதாரர்** | பாதிக்கப்பட்ட மற்றும் ஒரு நிறுவனத்தின் தயாரிப்புகள், செயல்பாடுகள், சந்தைகள், தொழில்கள் மற்றும் விளைவுகளின் சில அம்சங்களைப் பாதிக்கக்கூடிய ஒரு தனிநபர், சமூகம் அல்லது நிறுவனம். பங்குதாரர்கள் **உள்புறமாக** (எடுத்துக்காட்டாக, ஊழியர்கள்) அல்லது **வெளிப்புறமாக** (எடுத்துக்காட்டாக, வாடிக்கையாளர்கள், வழங்குநர்கள், பங்குதாரர்கள், நிதியாளர்கள், வர்த்தகச் சங்கங்கள், அரசு சாரா நிறுவனங்கள், ஊடகங்கள், அரசாங்கம் அல்லது உள்ளூர் சமூகம்) இருக்கலாம். |
| **துணை ஒப்பந்ததாரர்** | மற்றொரு ஒப்பந்தத்தின் பகுதியளவிலான அல்லது அனைத்து கடப்பாடுகளையும் மேற்கொள்வதற்காக கையொப்பமிடும் ஒரு தனிநபர் அல்லது சட்ட நிறுவனம். amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, சரக்குகளின் இறுதி உற்பத்தியை முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ மேற்கொள்வதற்காக, உற்பத்தியாளரால் நியமிக்கப்பட்ட தொழில் பங்குதாரரைக் குறிக்கும். |
| **துணை-வழங்குநர்** | amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, துணை வழங்குநர் என்பது, உற்பத்தியாளர் அல்லது அதன் துணை ஒப்பந்ததாரர்களுக்குப் பொருட்களை வழங்குவதில் பங்கு பெறும் வணிக நிறுவனத்தைக் குறிக்கிறது. எனினும், துணை வழங்குநர்கள் உற்பத்தியாளரின் ஒப்பந்தக் கடமைகளைச் செய்வதில்லை. |
| **வழங்குநர்** | ஒரு விற்பனையாளர் அல்லது ஒரு வழங்குநர் என்பவர், ஒரு வழங்கல் சங்கிலியின் சரக்குகள் அல்லது சேவைகளுக்குப் பங்களிக்கும் ஒரு தனிநபர் அல்லது ஒரு சட்ட நிறுவனம். இவர்கள் சரக்குகளின் வழங்குநர்களாக செயல்படலாம் அல்லது செயல்படாமலும் இருக்கலாம். இவர்கள் சரக்குகளின் உற்பத்தியாளர்களாக செயல்படலாம் அல்லது செயல்படாமலும் இருக்கலாம். அவர்கள் பொருட்களை வைத்திருக்காமல் இருக்கலாம் (உதாரணமாக முகவர்கள் மற்றும் வர்த்தகர்கள்). அவர்கள் பொருட்களுக்கு உரிமையாளர்களாக இருக்கலாம் (இறக்குமதியாளர்கள்). |
| **வழங்கல் சங்கிலி** | ஒரு தயாரிப்பு அல்லது சேவையை வழங்குநரிடமிருந்து வாடிக்கையாளருக்கு கொண்டு செல்வதில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள், மக்கள், செயல்பாடுகள், தகவல் மற்றும் வளங்கள் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த அமைப்பு. amfori BSCI -ன் நோக்கத்திற்காக, **amfori BSCI பங்கேற்பாளரின் குறிப்பிட்ட தொழில் பங்குதாரர்களால்** வழங்கல் சங்கிலி உருவாக்கப்படுகிறது**.** |

| | |
|---|---|
| **அமல்படுத்தல் விதிமுறைகள் (TOI)** | amfori BSCI -இன் நோக்கங்களுக்காக, அமல்படுத்துதல் விதிமுறைகள் (ToI) என்பன, amfori BSCI நடத்தை விதியுடன் இணைக்கப்பட்ட, amfori BSCI நடத்தை விதியை அமல்படுத்துவதற்கான உள்ளார்ந்தக் குறிப்பிட்டக் கடமைகளை விவரிக்கும் ஆவணங்களைக் குறிக்கிறது. மூன்று தனித்தனியான அமல்படுத்துதல் விதிமுறைகள் உள்ளன: a) amfori BSCI பங்கேற்பாளர்களுக்கானவை; b) கண்காணிப்புச் செயல்முறையில் சேர்க்கப்படாத amfori BSCI பங்கேற்பாளர்களின் தொழில் பங்குதாரர்களுக்கானவை; c) கண்காணிப்புச் செயல்பாட்டில் சேர்க்கப்பட்டுள்ள amfori BSCI பங்கேற்பாளர்களின் தொழில் பங்குதாரர்களுக்கானவை. கையொப்பமிடப்பட்டதும், இந்த அமல்படுத்துதல் விதிமுறைகள் தொழில் பங்குதாரரால் மற்றும்/அல்லது உற்பத்தியாளரால் உருவாக்கப்பட்ட ஒருதலைப்பட்ச ஒப்பந்தமாகச் செயல்படுகின்றன. எனவே, அமல்படுத்துதல் விதிமுறைகளின் எந்தவொரு மீறலும், ஒப்பந்தப் பொறுப்புக்கு வழிவகுக்கும். |
| **வர்த்தகச் சங்கம்** | பொதுவான குறிக்கோள்கள் மற்றும் சிறந்த வேலை நிலைமைகளை அடைவதற்காகச் சுதந்திரமாக இணைக்கப்பட்ட தொழிலாளர்களின் ஓர் அமைப்பு. வர்த்தகச் சங்கம், தனது தலைமைப்பொறுப்பின் மூலமாக, தொழிற்சங்க உறுப்பினர்களின் சார்பில் (தரவரிசை மற்றும் கோப்பு உறுப்பினர்கள்) முதலாளியுடன் பேரம் பேசுகிறது. மற்றும் தொழிளார் ஒப்பந்தங்களின் மீது (கூட்டு பேரம்) முதலாளிகளுடன் பேச்சு வார்த்தை நடத்துகின்றது. இந்தக் கூட்டமைப்பு அல்லது சங்கங்களின் பொதுவான நோக்கம் “தங்கள் வேலைகளின் நிலைமைகளைப் பராமரிப்பது அல்லது மேம்படுத்துவது ஆகும்.” ஊதியங்கள், பணி விதிகள், புகார் நடைமுறைகள், பணியமர்த்தல் விதிமுறைகள், பணி நீக்கம் மற்றும் தொழிலாளர்களை ஊக்குவித்தல், நலன்கள், பணியிடப் பாதுகாப்பு மற்றும் கொள்கைகள் ஆகியவற்றின் மீதான பேச்சுவார்த்தைகள் இதில் அடங்கும். |
| **மூன்றாம் தரப்பு பங்குதாரர்** | தொழில் பங்குதாரர்களுக்கான amfori BSCI அமல்படுத்தல் விதிமுறைகளின்படி, "மூன்றாம் தரப்பு பங்குதாரர்" என்றால், ஒரு தொழில் பங்குதாரருடன் வணிக உறவு கொண்ட வணிக நிறுவனமாகும். இது கையொப்பமிட்ட தொழில் பங்குதாரரின் தொழில் பங்குதாரர் ஆகும். தொழில் பங்குதாரர்களுக்கு amfori BSCI அமல்படுத்துதல் விதிமுறையில் மட்டுமே, கையொப்பமிட்ட தொழில் பங்குதாரருக்கும் அந்த மூன்றாம் தரப்பு பங்குதாரருக்கும் இடையில் ஒரு தெளிவான வேறுபாட்டை உருவாக்கும் பொருட்டு இந்தச் சொல் பயன்படுத்தப்படுகிறது. எனினும், "தொழில் பங்குதாரர்" வரையறையின்படி மூன்றாம் தரப்பினரும் அதே பங்காற்றும் நபர்களே. |
| **ஊதியம் பெறுவோர்** | ஒரு வழக்கமான அடிப்படையில் (உள்ளூர் சட்டப்படி) சம்பளம் பெறாத ஒரு வணிக நிறுவனத்தின் பணியாளர்கள் ஆனால் உற்பத்திச் செய்யப்படும் அலகுகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் ஊதியமளிக்கப்படுபவர்கள். அவர்கள் வழக்கமான தொழிலாளர்களாகக் கருதப்பட மாட்டார்கள், ஆனால் ஒரு உண்மையான முன்னோக்கில், அவர்கள் அந்த வணிக நிறுவனக் கட்டமைப்பின் ஒரு பகுதியாவார்கள். amfori BSCI தணிக்கைக் கேள்வித்தாளில், அவர்கள் “உற்பத்தி அடிப்படையிலான பணியாளர்கள்” என்று அழைக்கப்படுகிறார்கள். |
| **பணியாளர்** | நேரடி வேலைவாய்ப்பாகவோ, ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது அந்த வணிக நிறுவனத்துடன் அவள்/அவன் உறவு பாராட்டும் வகையிலோ, ஒரு வணிக நிறுவனத்துக்காக அவள்/அவன் சுதந்திரமாக வேலை செய்யும் ஒரு நபர். |
| **இளம் தொழிலாளர்** | ஒரு பணி செய்யும் நபர், குழந்தையைவிட அதிக வயதுடையவர் (வரையறையைப் பார்க்கவும்), ஆனால் 18 வயதிற்குக் குறைவாக உள்ளவர், இவர் தேசியச் சட்டத்தின் கீழ் கட்டாய முழுநேர பள்ளிக்கூடம் செல்வதற்கு இனி உட்படுத்தக்கூடியவர் அல்ல. இந்த நிலையின் நீட்டிப்பு என்பது இளைஞர் பாதுகாப்பை விரிவாக்கும் நோக்கத்தில் வெவ்வேறு அரசியல் கருவிகளால் வரையறுக்கப்படுகிறது. |

**amfori ஒரு வெளிப்படையான மற்றும் நீடித்து நிலைக்கக்கூடிய வர்த்தகத்திற்கான ஓர் உலகளாவிய முன்னணி தொழில் கூட்டணி ஆகும். எல்லா வர்த்தகங்களும் ஒவ்வொருவருக்கும் சமூக, சுற்றுச்சூழல் சார்ந்த மற்றும் நிதிசார்ந்த பலன்களை அளிக்கும் ஓர் உலகமே எங்கள் தொலைநோக்குப் பார்வை ஆகும்.**

amfori
Av. De Cortenbergh, 172
1000 ப்ருசெல்ஸ்
பெல்ஜியம்
தொலைபேசி: +32-2-762 05 51
தொலைநகல்: +32-2-762 75 06
info@amfori.org
www.amfori.org